## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ்
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
## அறிக்கை – 8.4.2013

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனதிலும், உடலிலும் உறுதியுள்ள இளைய தலைமுறையினரை உருவாக்குவதிலும், சர்வதேச அளவில் நமது நாட்டின் பெயரை நிலைநிறுத்துவதிலும் இன்றியமையாத் தன்மையை வகிப்பது விளையாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது. இளைய சமுதாயத்திற்குத் தேவையான நற்பண்புகளை புகட்டி அவர்களை பொறுப்புள்ள மனிதர்களாக மலரச் செய்யும் விளையாட்டுத் துறைக்கு எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இதன் ஒரு பகுதியாக, கடந்த 2011 ஆம் ஆண்டு உலக சதுரங்க கூட்டமைப்பின் தலைவர் திரு. Kirsan Illyumzhinov அவர்கள் என்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்து 2012 ஆம் ஆண்டுக்கான உலக சதுரங்க வாகையர் போட்டியினை, World Chess Championship-ஐ சென்னையில் நடத்தும்படி என்னிடம் வேண்டுகோள் விடுத்தவுடன், இதுவரை இந்தியாவில் நடைபெறாத இந்த உலக சதுரங்க வாகையர் போட்டியினை 20 கோடி ரூபாய் செலவில் சென்னையில் நடத்த ஒப்புதல் அளித்தேன்.

இருப்பினும், இந்தப் போட்டியை நடத்துவதற்காக நடத்தப்பட்ட ஏலத்தில், அதிகத் தொகையினை ரஷ்ய நாடு குறிப்பிட்டதால், 2012 ஆம் ஆண்டுக்கான உலக சதுரங்க வாகையர் போட்டி ரஷ்ய நாட்டில் நடைபெற்றது. 2012 ஆம் ஆண்டுக்கான உலக சதுரங்க வாகையர் போட்டியினை நடத்த தமிழ்நாடு முன் வந்ததைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள உலக சதுரங்க வாகையர் போட்டியினை ஏல முறையின்றி சென்னையில் நடத்த உலக சதுரங்க கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலக சதுரங்க கூட்டமைப்பின் வேண்டுகோளினை ஏற்று, 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள உலக சதுரங்க வாகையர் போட்டியினை சென்னையில் நடத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதையும், இதற்கென 29 கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்யும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் போட்டிகள் ஐந்து முறை உலக வாகையர் பட்டம் சூடிய தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும், தற்போதைய உலக சதுரங்க வாகையருமான கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் தற்போதைய உலக தர வரிசையில் முதல் சதுரங்க வீரராகவும், FIDE தர வரிசைப் பட்டியலில் இதுவரை உயர்ந்த அளவில் 2,872 புள்ளிகள் பெற்று முன்னணியில் உள்ள நார்வே நாட்டைச் சேர்ந்த திரு. மேக்னஸ் கார்ல்சன் (Mr. Magnus Carlsen) ஆகியோருக்கும் இடையே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச அளவிலான இது போன்ற போட்டிகள் சென்னையில் நடத்தப்படுவதன் மூலம் இளைய சமுதாயத்தினர் இடையே சதுரங்க விளையாட்டினை பயில்வதற்கான ஆர்வம் மேலும் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், பல சதுரங்க விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

* * * * * * *